**பதவி வெற்றிடங்கள்**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.<u>முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற வகுதி)</u>**

**தகைமைகள் (பொது) :-**
**<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்</u>**

**கல்வித் தகைமைகள்:**

அ) கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உள்ளிட்ட 4 பாடங்களில் திறமை சித்தியுடன் ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்/தமிழ் மொழி
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**மற்றும்**

ஆ) கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) சித்தியெய்திருத்தல் வேண்டும்.

**<u>உள்ளக விண்ணப்பதாரர்கள்:-</u>**

மேற்குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய முதன்மை நிலை வகுதியிலுள்ள திறன்சார் ஊழியர்கள் மற்றும் முதன்மை நிலை வகுதியிலுள்ள திறன்சார ஊழியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உள்ளிட்ட 4 பாடங்களில் திறமை சித்தியுடன் ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்/தமிழ் மொழி
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**வேறு தகைமைகள்:**

மேற்கண்ட உத்தியோகத்தர் பிரிவின் கீழ் நிரந்தர பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளமை இப்பதவிக்கான தகைமையாக கருதப்படும்.

**சம்பளம்: MA 1-1-2025 (ரூபா. 46,220 - 10×540 - 7×630 - 4×890 - 20×1190 - 83,390) (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01.2025) மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்)**

**வயதெல்லை:** 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

நேர்முகப்பரீட்சைக்கான புள்ளித்திட்டம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தொடர்புடைய கூடுதல் அனுபவம் - | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய கூடுதல் தகைமைகள் - | 30 புள்ளிகள் |
| ஏனைய அடைவுகள் - | 15 புள்ளிகள் |
| நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சி - | 25 புள்ளிகள் |
| | 100 புள்ளிகள் |

விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சியின் அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1.அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரஜையாக இருப்பதோடு சிறந்த நடத்தையுடையவராகவும், கடமைகளை திறம்பட மேற்கொள்வதற்கான உடல், உள ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
2.ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.
3.ஏற்கனவே அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தாம் சேவையாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக இப்பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேலும்; குறித்த பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து, நியமனத்திற்காக விண்ணப்பதாரி விடுவிக்கப்படமுடியும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
4.பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான மேற்கூறப்பட்ட அனைத்து தகுதிகளிலும் பூரணத்துவம் பெரும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைப்புவிடுக்கப்படுவர்.
5.மேற்கண்ட கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6.விண்ணப்பத்தாரரின் அனைத்து தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனைத்து வகையிலும் பூரணத்துவம் அடைந்திருந்தால் மாத்திரமே, விண்ணப்பதாரர் இப்பதவிக்கான விண்ணப்பத்திற்கு தகைமையுள்ளவர் என்று கருதப்படுவார்.
7.இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் குழுமம் நியமனம் வழங்கும் அதிகாரத்தை கொண்டிருப்பர்.
8.வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் நபர்களின் சம்பள அளவுத்திட்டம் ஆரம்ப மட்டத்தில் காணப்படும் அதேவேளை, உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் நபர்களின் சம்பளம் தாபன விதிக்கோவையின்; அத்தியாயம் VII இன் ஏற்பாடுகளுக்கு இணங்க தீர்மானிக்கப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி விண்ணப்பம் மற்றும் இரண்டு உறவுமுறை தொடர்பல்லாத நடுவர்களின் விபரம், கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கிய சுயவிபரக்கோவை என்பன **2025 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கப்பெறுமாறு “செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல 14, ஆர் த மெல் மாவத்தை, கொழும்பு 04” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதலும் வேண்டும்.

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
**10.04.2025**